# திருந்திய அறிவிப்பு

நாகப்பட்டினம் மாவட்டம்., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை

நாகப்பட்டினம் மாவட்டம், வட்ட அலுவலகம், திருக்குவளை

**அறிவிக்கை எண்.3504530/2025/அ2 நாள். 23.09.2025.**

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வருவாய் கோட்டத்திற்குட்பட்ட திருக்குவளை வருவாய் வட்டத்தில் காலியாக உள்ள கிராம உதவியாளர் பணியிடங்களை நிரப்பிட தகுதி வாய்ந்த நபர்கள் 15.07.2025 முதல் 14.08.2025 வரை விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கை எண்3504530/2025/அ2 நாள் 15.07.2025-ன் படி அறிவிப்பு வெளியிடப்பட்டது. தற்போது வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை (பணி -8(1) துறை சென்னை கடித (MS) எண் 838/8(1)/2025 நாள்.18.09.2025-இன் படி கிராம உதவியாளர் பணிநியமனத்திற்கு வயது வரம்பு கீழ்கண்டவாறு பின்பற்ற வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளதால் கீழே கொடுக்கப்பட்டுள்ள வயது வரம்பிற்குட்பட்ட தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம். **ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளதால் மீண்டும் விண்ணப்பிக்க தேவையில்லை.**

| இனம் | முந்தைய அறிவிப்பில் வயது வரம்பு (01.07.2025 அன்று) | திருந்திய அறிவிப்பின்படி வயது வரம்பு (01.07.2025. அன்று) |
|---|---|---|
| பொது பிரிவினருக்கும் - OC/GT | குறைந்தபட்ச வயது 21<br>அதிகபட்ச வயது 32 வயது | **குறைந்தபட்ச வயது 21 அதிகபட்ச வயது 32 வயது (01.07.1993 முதல் 30.06.2004 வரையில் பிறந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.** |
| இதர பிரிவினர்கள்-BC/ BC(M)/MBC/DNC | குறைந்தபட்ச வயது 21<br>அதிகபட்ச வயது 37 வயது | **குறைந்தபட்ச வயது 21 அதிகபட்ச வயது 39 வயது (01.07.1986 முதல் 30.06.2004 வரையில் பிறந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.** |
| அட்டவணை வகுப்பினர் பழங்குடியினர் மற்றும் அருந்ததியினர் மற்றும் ஆதரவற்ற விதவை SC/SC(A)/ST) | குறைந்தபட்ச வயது 21<br>அதிகபட்ச வயது 37 வயது | **குறைந்தபட்ச வயது 21 அதிகபட்ச வயது 42 வயது (01.07.1983 முதல் 30.06.2004 வரையில் பிறந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.** |
| முன்னாள் இராணுவத்தினர் | பொது பிரிவினருக்கு (OC/GT) - 50 வயது<br>இதர பிரிவினருக்கு(BC/ BC(M) /MBC/ DNC/ SC/SC(A)/ST))- 55 வயது | **பொது பிரிவினருக்கு (OC/GT) - 50 வயது<br>இதர பிரிவினருக்கு(BC/ BC(M) /MBC/ DNC/ SC/SC(A)/ST)- 55 வயது** |

| | |
|---|---|
| விண்ணப்பங்கள் பெறப்படும் நாள். | 24.09.2025 முதல் |
| விண்ணப்பங்கள் சமர்பிக்க கடைசி நாள். | 08.10.2025 மாலை 5.45 மணி வரை |
| பதவியின் பெயர் | கிராம உதவியாளர் |
| பணி விதிகள் | தமிழ்நாடு கிராம உதவியாளர் பணி விதிகள் சிறப்பு விதி |
| ஊதிய விகிதம் | ரூ.11,100/- முதல் 35,100 /- வரை |
| வட்டத்தின் பெயர் | திருக்குவளை |
| நிரப்பப்பட உள்ள காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | 05 |

| வ. எண் | கிராமம் | காலியிடங்களின் எண்ணிக்கை | இன சுழற்சி | இனம் | முன்னுரிமை/ முன்னுரிமை அற்றவர் | பொது/ ஆண் /பெண் | ஆதரவற்ற விதவை / முன்னாள் இராணுவத்தினர்/ மாற்றுத்திறனாளி |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 2.ஆதமங்கலம் | 1 | 28 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | முன்னுரிமை பெற்றவர் *** | பொது | |
| 2. | 4.பாங்கல் | 1 | 29 | பொதுப்போட்டி | முன்னுரிமை அற்றவர் | பெண் | |
| 3. | 9.அணக்குடி | 1 | 30. | பிற்படுத்தப்பட்டோர், (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) | முன்னுரிமை அற்றவர் | பெண் | |
| 4. | 7.காருகுடி<br>8.வலிவலம் | 1 | 31. | பொதுப்போட்டி | முன்னுரிமை அற்றவர் | பொது | முன்னாள் இராணுவத்தினர் |
| 5. | 30.நீர்முளை | 1 | 32. | ஆதிதிராவிடர் (முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியினர்) | முன்னுரிமை அற்றவர். (அருந்ததியினர் இல்லாத பட்சத்தில் ஆதிதிராவிடர் இனத்தை சேர்ந்தவருக்கு வழங்கப்படும்) | பொது | |

***முன்னுரிமை பெற்றவர் எனில் அரசாணை எண்.142 மனித வள மேலாண்மைத் துறை நாள்.14.10.2009 மற்றும் அரசாணை எண்.122 மனித வள மேலாண்மைத் துறை நாள்.02.11.2021-இன்படி நடைமுறை பின்பற்றப்படுகிறது.

| | |
|---|---|
| கல்வித்தகுதி | 1.விண்ணப்பதார் குறைந்தபட்சம் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி அல்லது தோல்வியடைந்தவராக இருக்க வேண்டும்.<br>2.விண்ணப்பதார் தமிழை ஒரு பாடமாக பயின்று இருக்க வேண்டும்.<br>3.மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்பிக்கவேண்டும். |
| இதர தகுதிகள் | 1.விண்ணப்பதார் சொந்த கிராமம் அல்லது சொந்த வட்டத்தை சேர்ந்தவராக இருக்கவேண்டும்.<br>2.மிதிவண்டி அல்லது இரு சக்கர வாகனம் ஓட்டும் திறன் பெற்றிருக்க வேண்டும்.<br>3.தேர்வு செய்யப்படுவரின் நடத்தை குறித்தும் முந்தைய குற்ற பின்னணி குறித்தும் நியமன அலுவலர் அறிந்து திருப்தி அடைய வேண்டும்.<br>4.அடிப்படை விதி 10-ன்படி உடற்தகுதி சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.<br>5.தேர்ந்தெடுக்க கூடிய நபரின் கணவரோ. மனைவியோ, உயிரோடிருக்கும் போது வேறொரு திருமணம் செய்திருக்க கூடாது. |
| விண்ணப்பிக்கும் முறை | 1. விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு நேரிலோ, அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ 08.10.2025 அன்று மாலை 5.45 மணிக்குள் வரப்பெற வேண்டும்.<br>**வருவாய் வட்டாட்சியர், வட்ட அலுவலகம், திருக்குவளை வட்டம்-610204, நாகப்பட்டினம் மாவட்டம்.**<br>2. விண்ணப்பத்துடன், விண்ணப்பதார் புகைப்படம்,கல்விச்சான்று, இருப்பிடச்சான்று, ஆதார் அட்டை நகல், ஓட்டுனர் உரிமம் நகல், வகுப்புச்சான்று நகல், முன்னுரிமைச்சான்று நகல், மற்றும் குடும்ப அட்டை நகல் ஆகியவை கட்டாயமாக இணைக்கப்பட வேண்டும்.<br>3.விண்ணப்பத்தில் ஏற்படும் சந்தேகங்களுக்கு திருக்குவளை வட்டாட்சியரை அணுகலாம்.<br><br>வருவாய் வட்டாட்சியர்,<br>திருக்குவளை. |